# <u>சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.</u>

**<u>அ.வ எண்: 70/2020 முனியம்மாள் (வாசா1) தேதி:16.10.2024</u>**

**<u>வாசா. 1 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>**

நீமசாஆ.1 ஆவணம் கோவில்பட்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல்வழக்கு எண். 78/1992 வழக்கில் குறியீடு செய்யப்படாத ஆவணமாக இருந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. கோவில்பட்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல்வழக்கு எண். 78/1992 வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். நீமசாஆ.1 ஆவணம் போலியான ஆவணம் என்பதால்தான் கோவில்பட்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல்வழக்கு எண். 78/1992 வழக்கில் குறியீடு செய்யப்படவில்லை என்றால் சரில்ல. கோவில்பட்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல்வழக்கு எண். 78/1992 வழக்கு சம்பந்தபட்ட தீர்ப்புரை, தீர்ப்பாணை உள்ளிட்ட அனைத்து ஆவணங்களையும் நகல்எடுத்து இந்த வழக்கில் தாக்கல்செய்ய தயாராக உள்ளேனா என்றால் இனிமேல்தான் பார்க்கவேண்டும். மேற்படி ஆவணத்தின் ஜெராக்ஸ் ஐ நான் பார்த்துள்ளேனா என்றால் நான் பார்க்கவில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் நீமசாஆ.1 ஆவணத்தை எனக்கு சுமார் 11 வயது இருக்கும்போது பார்த்துள்ளேன். எனக்கு தற்போது 52 வயது ஆகிறது. நீமசாஆ.1 சம்பந்தபட்ட கோவில்பட்டி வருவாய் வட்டாட்சியர் அலுவலக 1985ம் வருட பின்கோப்புகளை இந்த நீதிமன்றத்திற்கு வரவழைக்க தயாராக உள்ளேனா என்றால் எனது வழக்கறிஞரிடம் கேட்டுதான் கூறமுடியும். வட்டாட்சியர் அலுவலக 1985ம் வருட பின்கோப்புகள் வட்டாட்சியர் அலுவலகத்தில் கிடையாது என்றால் சரியல்ல.

நீமசாஆ.1 போலியான ஆவணம் என்றாலும், கோவில்பட்டி வட்டாட்சியரால் வழங்கப்படவில்லை என்றாலும், அதனால்தான் அ.வ.எண். 78/1992 வழக்கில் குறியீடு செய்யப்படாமல் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நீமசாஆ.1 ன் பெயரில் தாவாசொத்தை பொறுத்து எனக்கு எந்த உரிமையும் கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.